ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்ய தர்மம்.

**वरं वरयते कन्या माता वित्तं पिताश्रुतम् ।**
**बान्धवाः कुलमिच्छन्ति मृष्टान्नमितरे जनाः ॥**

விவாகத்திற்கருகையான மங்கையானவள் மிகவும் அழகு பொருந்திய மேனியுடன் கூடிய கணவனை விரும்புகிறாள். அவள் தாயானவள் அதிகமான பொருள்வேண்டுமென்று இச்சிக்கிறாள். அவளுடைய தந்தையோ விசேஷமான சாஸ்திரப்பயிர்ச்சி யிருக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிறார். அவளுடைய பந்து ஜனங்கள் சிறந்த குலத்தை எதிர்பார்க்கிறார்கள். மற்றுமுள்ள சுற்றத்தார்கள் அறுசுவையுடன் கூடிய போஜனத்தில் விருப்புக் கொள்கிறார்கள்.

ஒரு கன்னிகைக்கு விவாஹம் செய்யவேண்டுமானால் முக்கிய பாத்யஸ்தர்களின் கருத்தை அனுஸரித்துத்தான் நடைபெற வேண்டும். அவளுக்கு பாத்தியஸ்தர்கள் பலரிருப்பினும் அவர்களுக்குள் அன்னையும் பிதாவுமே முக்யமானவர்கள். அவர்களின் நோக்கத்தைக் கவனித்தால் ஒருவர் பொருளையும் மற்றொருவர் கல்வியையும் விரும்புகிறார்கள். கல்விக்கும் செல்வத்திற்கும் இயற்கையி லொற்றுமையில்லை என்பது வெளிப்படை. இது இவ்விதமிருக்க விவாஹ கன்னிகையானவள் சிறந்த ரூபத்தை யெதிர்பார்க்கிறாள். இம்மூன்றும் ஒருங்கு சேர்ந்து எங்ஙனம் விவாஹம் நடைபெறும். அதிலும் மிகவும் எழ்மைத் தனத்தி விருப்பவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? ஆகையால் இவ்வித நியமங்களை விலக்கி சாஸ்திரங்களிற் கூறிய விதியை யங்கீகரித்தால் சுலபமாயிருக்கும்.

# ஸம்ஸ்கிருத பாஷாபி விருத்தி

இவ்விஷயத்தில் நாம் மகம்மதியர்களைப்பார்த்து நம் ஒழுக்கத்தைத் திருத்திக்கொள்ளல்வேண்டும். அவர்கள் தங்கள் சிறுவர்களுக்கு படிப்புத் துவக்கம் செய்யும் பொழுதே "குரான்" எனும்தங்கள்வேதத்தை முதல்முதலாகக் கற்பிக்கின்றனர். மற்ற படிப்புகள் இதற்குப் பின்னரே. ஆனால் இந்துக்களோ மதசம்பந்தமான படிப்பை திருணமாக நினைக்கின்றனர். இஃதென்ன அநியாயம்! தற்காலம், புராதனமான நமது ஸமஸ்கிருத பாஷையின் துர்தசையை நோக்குங்கால் மனம் துன்புறுகின்றது. ஏதோ சிறிதுகாலமாக நம் இந்துக்களின் மத்தியிலுதித்த இவ்வாங்கில பாஷையானது குலகோத்திர மறியாத நிலைமையிலிருந்து அநேக கிருஸ்தவர்களால் ஆதரிக்கப் பெற்று இப்பொழுது எங்கும் நிறைந்திருக்கின்றது "அறிஞனேயறிஞர் திறமையை அறிவானேயன்றி, மற்றவன் அறியான். பிள்ளையின் வருத்தத்தைப் பேடி யறிவாளோ" என்பதுபோல், இக்காலத்தவர்கள், வடமொழிகற்கும் வைதிக பண்டிதர் படும் சிரமத்தை ஒரு சிறிது மறியாது, ஏதோ தாங்கள் ஆங்கிலம் படித்ததினால் தாமே புத்திமான்களென்ற வீணெண்ணமும் அகந்தையும் உடையவராய் விடுகின்றனர். பண்டிதர்களோ தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்களை பாடுபட்டுப் படித்து அச்சாஸ்திரங்களில் பிரசங்கிக்கும் திறமை பெற்றவர்களெனினும் அவர்களுக்குச்சமானமான திறமையுள்ள ஆங்கிலம்பயின்றவர்களடையும் லாபத்தில் ஒருசிறிதும் அடைவதில்லை. விரித்துக் கூறுவதில் பயன்யாது? ஸம்ஸ்கிருத பாஷையடைந்திருக்கும்

திசையில் இது ஒன்று. அனேகர் அப்பாஷையை அப்பி யசித்து ஒருகாசும்கூட வருமானமில்லாமலிருப்பது நம் தேச த்தவர்கட்கு ஆராத்துயரன்றோ. எல்லாவற்றிற்கும் வறுமை யே பயனெனச் சொல்வது ஓர் வழியில் நியாயமேயானாலும் இவ்வுலகத்தில் குடும்பஸம்ரக்ஷணம் செய்வதும் புண்யமென்று மனுவாதிகளெடுத்துரைத் திருக்கின்றனரே! நம் தேசத்துப் பெண்மணிகளே வைதிக வித்வான்களை ஸம்ஸ்கிருதபடிப்பில் ஒரு காசுமில்லையே யென்று பரிகஸிக்கின்றனர். தங்கள் பிள்ளை களை ஆங்கிலேய பள்ளிக்கூடங்களுக்கே அனுப்புகின்றனர். இதனால் துவக்கம் முதல் சிறுவர்களின் மனது தங்கள் மதத் திலும் அதற்கு சாதனமான ஸம்ஸ்கிருத பாஷையிலும் பற்றில் லாமல் போய்விடுகின்றது. நண்பர்களே! இதற்கு அச்சிறுவர் கள் காரணமல்ல இது அவர்களைநடத்திவரும் பெரியோர்களின் பிழையே. ஒருவன் தனக்குத் தெரியாமல் மறைவிலிருக்கும் ஓர் வஸ்துவின் சிலாக்யத்தைக் கொண்டாடுவானா? அவ்வித மாகவே இந்துமதமானது எவ்வளவு நியாயங்களோடு பலமான வேதாந்த கோட்பாடுகளுள்ளதாயிருந்த போதிலும் மறைவில் ஒளித்திருக்கிறது. "இக்காலத்திலோ இந்துமதம் சுத்தமாய் பிரயோஜனமற்றது; அதையனுஷ்டிப்பதால் ஒருவனுக்கு சம் சார பந்தமிழந்து முக்திகிடைக்கமாட்டாது" என்று பிதற்றிக் கொண்டு மனிதர்கள் மனதை அநியாயமாய் படுகுழியில் தள் ளுவதற்கு அனேகர் கிளம்பியிருக்கின்றனர். அந்தோ! இது வென்ன விந்தையிலும் விந்தை! இது மாத்திரமல்ல ச்ரௌத ஸ்மார்த்தக் கிரியைகளை செய்விப்பவர்களான உபாத்தியாயர் என்ற மற்றொருதிறத்தாருமுண்டு. அவர்கள் தௌர் பாக்யம் பல விதம். அவர்களில் பெரும்பான்மையோர் வித்புத்தி ஹீனர்கள். பலநாட்களில் முடிக்கவேண்டியதை ஒரு நாளில் முடித்தும், ஒரு நாளில் முடிக்கவேண்டியதை பல நாட்களோ ட்டியும் தோன்றியவாறு செய்துவிடுவார்கள். கோத்திரஞா னமும் சாஸ்திரஞானமும் சிறிதுமன்றி, கிருகஸ்தர் செய்யும் வகைச் சொற்களுக்கெல்லாம் அவர்களே முக்கிய பாத்திரமா

வது வழக்கம். சிலவிடத்திற் சிலர் அடிக்குபயந்து உளருவதுமுண்டு. மீண்டுமவர்களுக்கு அவரே கதியாகின்றார். இவர்கள் கதியையும் நினைக்க நினைக்க ஆறாத்துயர் உண்டாகின்றது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் பாஷா ஞானமின்மையேயன்றோ!

சிநேகிதர்களே! இப்பொழுதுங் கூட நாம் முன்போலவே இந்துமதத்திலுள்ள சிலாக்யமான கோட்பாடுகளை யெடுத்து பிரசங்கிக்காமல் படுத்துறங்குவது தர்மமா? அவ்விதமெடுத்துக் கூறுவதற்கு ஸம்ஸ்கிருதப் படிப்பு இன்றியமையாதலால் அவை சீக்கிரத்தில் உத்தீபனஞ் செய்ய வேண்டுவது முழுமுதற் கடமையாகும். நமது இந்து ஜனசாரமும் நாம் மேன்மையான ஸ்திதியிலிருக்க வேண்டியதும் சம்ஸ்கிருதபடிப்பின் விருத்தியிலகப்பட்டிருக்கின்றது. ஏனெனில் நமது ஆசாரங்களுக்கு முதன்மையானவர்கள் பிராமணர்களே. அவர்களைச் சிறந்தவர்களாய்ச் செய்வது ஸம்ஸ்கிருதப் படிப்பே. நமது சங்கத்துக்கு முதன்மையானவர்களும் கீழோர்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்து அவர்களை நல்வழியில் திருப்பி முக்தியடையும்படி செய்விக்கும் பாரத்தை முற்காலம் முதல் தாங்கியிருப்போர்களுமான அந்தணர்கள் ஆசாரம் முதலான கொள்கைகளில் சீக்கிரம் விருத்தியடைவார்களானால் மற்றைய இந்து ஜனம் முழுவதும் விருத்திக்கு வருங்காலம் வெகு தூரத்திலில்லையென உறுதியாய்க் கூறலாம். வேதங்களை அப்பியசிக்க வேண்டுமென்றால், அவைகளை உள்ளடக்கி அவைகளுக்கு ஓர் போர்வையைப் போல் மூடிக் கொண்டிருக்கும் ஸம்ஸ்கிருத பாஷையை நன்றாய்க்கற்கவேண்டுவது நாம் செய்யவேண்டிய முக்கியமான முதற்கருமமாகும்.

(இன்னும் வரும்).

# தானம்

(௩௪அ-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே சில நாட்களில் அம்மன்னவனும் தியான யோகத்தால் பரமபதத்தை அடைந்தனன். ஆயினும் அங்கு திருமாலைக் காணவில்லை. பசியின் பாதையோ சொல்ல முடியாது. தன் காதலியுடன் இங்குமங்கும்ஓடுவான் பார்ப்பான் ஒரு தின்பண்டமும் கூட கண்களுக்குப் புலப் படாது. இவ் விதம் பசியின் கொடுமையால் துயரமுற்று தன் காதலியை நோக்கிக் கூறுவதாயினன். ஓ ஆருயிர்க் காதலி ?யாம் தியான யோகத்தால் பரமபதத்தை அடைந்தும், காசிக்குப் போனாலும் கர்மம் துலையாதென்ற மூதுரைக்கிணங்க தானம் செய்யாத தோஷத்தால் பசி தாகம் பாதிக்கின்றது. திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பகவானைப் பார்க்க வேண்டாமா ? அவரையும் காணவில்லையே ? எவ்வளவு தியானங்கள் செய்தும் பயனென்ன புரோஹிதர் கூறியவார்த்தைகளை அலட்சியம் செய்தோமே. பசியின் கொடுமையால் கண்களும் தெரியவில்லையே. இச்சமயம் நமக்கு எண்ணிறந்த விமானங்கள் இருந்தும் என்னபயன். புரோகிதரைக்காசாசை பிடித்துச் செல்லுகிறவரைப் போல் நினைத்துவிட்டோமே. என்று பலவிதமாகப் புலம்பிக் கொண்டு கடைசியாக ஏதோ புண்ணியவசத்தால் ஓர் முனிவரின் ஆசிரமத்தைக் கண்டான். உடனே அங்கு ஏதேனும் தின்பண்டங்கள் அகப்படுமெனக்கருத்துடன் அங்கு சென்று பார்க்கவே அங்கு யோகாஸனத்தில் அமர்ந்திருக்கும் வாமதேவரென்னும் முனிவரைக்கண்ணுற்று அவரைப் பலவிதவுபசாரங்களால் தொழுதபின் தமது வினையை நவில முனிவர் கூறுவதாயினர்:—

நீர் கர்ம லோகத்தில் தானம் என்றும் கர்மாவை அனுஷ்டிக்கவில்லை. அளவிறந்த அகச் சுத்தியுடன் த்யானம் செய்து

திருமாலே உபாசிப்பவர். ஆயினும் தாங்கள் பகவானை நைவேத னங்களால் திருப்தி செய்வது கிடையாது: அந்தணரின் பொருட்டு அளவிறந்த அன்னதானங்களை அளிக்கவில்லை. வதியின் பயனை வெல்ல விதியாலுமியலாது. ஆதலாற்றான் இப்பரமபதத்தில் தங்களுக்கு எவ்வளவு உபசாரங்களிருந்தும் பசியின் பாதை தீரவில்லை. கர்மாவின் பயனை அனுபவித்துத்தான் தீர வேண்டும். தங்கள் காதலியோ பசியின் கொடுமையால் மெலிந்து இருக்கிறாள். இனி அரைக்ஷணமாவது உங்களால் உயிருடன் இருக்கமுடியாது. ஆனந்த மென்னும் வனத்திற்குள் இருக்கும் தடாகத்தில் உன் சரீரமும் நின்காதலியின் சரீரமும் இருக்கின்றது. அப்பிணங்களைத் தின்று பசிப் பிணியை ஆற்றிக்கொள்ளலாம். மஹாபாதகங்களைச் சங்கரிக்கும் வாஸுதேவஸ்தோத்திரங்கள் நின் செவிகளில் விழுங்கால் இத்துடன் நின்று விடும். திருமாலே தர்சிக்கலாம். என்றனர்.

ஆதலால் என் அருமைக் குஞ்சுகளே! அதுமுதற்கொண்டு சுபாகு வென்னுமவ்வேந்தன் தினந்தோறும் தடாகம் சென்று ஸ்னானம் செய்தபின்னர் மனைவியுடன் பிணங்களைத் தின்று பிணியைப் போக்கிக் கொள்வான். பிணங்களோ தினந்தோறும் பூர்ண வடிவங்களாய் இருக்கின்றன. இவர்கள் பிணங்களைப் பட்சிக்கும் கால் அட்டஹாஸம் செய்து நகைக்கும் இருநங்கைகள் பிரக்ஞையும், சிரத்தையுமேயாம். எக் காரணத்தால் இக்கொற்றவன் சிரத்தையுடன் தானம் செய்யவில்லையோ அது கொண்டே சிரத்தை என்னும் பெண் அட்டஹாஸம் செய்கிறாள். அது போல் பிரக்ஞை என்னும் ஸ்திரீ சுபாகு வென்பான் சிரார்த்தத்தில் புசிக்கும் அந்தணரால் பிதிருக்கள் திருப்தி அடைவதாயின் ஒருவனின் பசிப்பிணியை நிவிருத்தி செய்வதற்காக சங்கல்பித்து புசிப்பவனால் ஸங்கல்பிக்கப் பெற்றவர்கள் ஏன் தன் பசியை ஆற்றிக் கொள்ள முடியவில்லை. என்று இதுபோல் தன் பிரக்ஞையின் கூர்மையால் மறைகளை அலட்சியம் செய்ததால் பிரக்ஞை என்னும் ஸ்திரீயும் சுபாகுவை இச்சமயம் நகைக்கிறாள். சுபாகுவென்பான் அந்தண

ரின் பசியையும் தாகத்தையுமாற்றி வைக்காததால் தாகமும் பசியும் பயங்கரமானஸ்திரீ வடிவங்களுடன் கெஞ்சிக் கூத்தாடி யாசிக்கின்றன. என்று இவ்விதமாக விஜவலனின் சந்தேகத்தை நிவிருத்தி செய்த பின்னர் விஜவலன் தன் தந்தையிடமிருந்து மஹா-பாதகங்களைச் சங்கரிக்கும் சிற்சில ஸ்தோத்திரங்களைக் கற்றுக்கொண்டு சுபாகுவென்னும் மன்னனைத் துயர்கடலினின் றும் கரையேற்றி வைத்ததால் திருமாலை தர்சித்து மோட்சத்தை அடைந்தனன். ஆதலால் இத்தகைய தானத்தை இழக்காது நாம் செய்ய வேண்டுமென இத்துடன் இவ்வரலாற்றை பூர்த்திசெய்யலாயிற்று.

கே. எம். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

# பிரபஞ்சம் அநித்யம்.

திருவாதி ஸ்ரீமான் பட்டகோஸ்வாமி அவர்கள் வீட்டில் புதுக்கோட்டை சமஸ்தானம் அரண்மனை தானதிகாரி பிர்மஸ்ரீ விசுவநாதசாஸ்திரிகளவர்கள் செய்த உபந்யாசத்தின் சாராம்சமாவது:—

உலகினிலுள்ள எல்லாவஸ்துக்களும் அஸத்தியமே. ஆனால் எல்லாவஸ்துக்களும் பிரத்தியக்ஷமாகத் தோன்றுகிறபடியால், அவைகள் அனைவற்றையும் ஸத்தியமென்று சொல்லலாகாதா எனில் ஸ்வப்பனத்திலும் நாம் எத்தனையோ பதார்த்தங்களை பார்க்கிறோம். அவைகளை மித்தியை என்று அறிகிறோம். அது எங்ஙனமெனில், அந்த பதார்த்தங்கள் ஸ்வப்பனகாலத்திலிருந்து ஜாக்கிரத் காலத்தில் மறைவதினால் எவ்விதம் அநித்தியமோ, அங்ஙனமே ஜாக்ரத் பதார்த்தங்களும் ஸுஷுப்தி முதலிய காலங்களில் இல்லாததால் அஸத்தியமே. ஆகையால்,

முக்காலத்திலும் எவையிருக்கின்றனவோ, அவையே ஸத்திய மாம். ஆனால் இதில் ஒரு சந்தேகம் ஏற்படலாகும். அதாவது ஜாக்ரத்காலத்தில் ஒரே பதார்த்தத்தை அநேகர் பார்க்கிறார் கள், ஸ்வப்பனகாலத்திலோ ஒருவனே பதார்த்தங்களைப் பார்க் கிறான். ஆகையால் ஸ்வப்பன பதார்த்தங்கள்போல ஜாக்ரத் பதார்த்தங்கள் அஸத்தியமாகாதென்றால் உலகினில் ஒரு பதார் த்தம் ஒருவனுக்குத் தெரிந்தால் அஸத்தியமென்றும் பலருக் குத்தெரிந்தால் ஸத்தியமென்றும் கூறுவது உசிதமல்ல. அது எப்படியெனில், ஒரு ரகசியமான ரத்நத்தை ஒருவருக்கும் தெரியாது, ஒருவன் பெட்டியில்வைத்துப் பூட்டினால் அந்த ரத்நம் அவனுக்குமாத்திரம் தெரியுமாதலால் முன்கூறியபடி அந்த ரத்நத்தை நாம் அஸத்தியமென்று கூறவேண்டும். அப் படி கூறுவதில்லை. ஆகையால் இதை வைத்துக்கொண்டு மெய் பொய் என்பதை நிர்ணயிப்பது இயலாதகாரியம். மேலும், ஸ்வப்பனகாலத்தில் ஒரே பதார்த்தத்தை அநேகரும் பார்க்கக் கூடும். அப்படி ஒரு பதார்த்தத்தை அநேகர் ஒரேசமயத்தில் பார்ப்பதினால் அவைகளை நாம் ஸத்தியமென்று உணருவோமா அங்ஙனம் இவை யாவும் ஸத்தியமே.

அப்படியாயினும், ஸ்வப்பனகாலத்தில் புதிதாக அப்பொ ழுதுதான் பதார்த்தம் உண்டாகிறது. ஜாக்ரத்காலத்திலோ, பதார்த்தங்கள் முன்பே இருக்கிறபடியால் இவைகளை எங்ஙனம் பொய்யென்று சொல்வது எனின், ஒருவன் ஜாக்ரத்காலத்தில் ஒரு பதார்த்தத்தை பார்த்துவிட்டு, அதை பெட்டியில்வைத்து 2 நாளானபின், யாராவது பதார்த்தம் இருக்கிறதா வென்று கேட்டால் தான் பதார்த்தத்தைப் பாராமலே இருக்கிறது என்று சொல்லுகிறான். அங்கு அவன் எவ்விதம் பதார்த்தம் இருக்கிறது என்று சொன்னானெனின் அவனுடைய மனதில் அந்த பதார்த்தம் இருக்கிறதென்ற ஓரறிவு உண்டாயிருந்தது. அதனால் அந்தப்பொருள் இருக்கிறதென்றுசொன்னான். அதே மாதிரி ஒருவன் ஒருபொருளை வீட்டில் வைத்துவிட்டு வேறு ஊர் போனசமயம் அவ்வூரான் ஒருவன் அவனிடம் சென்று

டன்று பதார்த்தத்தை திருடர்கள் களவாடிவிட்டார்கள் என்று சொல்லவும், தான் ஊருக்குப்போய் அவைகளைப் பாராமலே அங்கிருந்தபடியே வருத்தப்படுகிறான். இவைகளை விசாரிக்குமிடத்து பதார்த்தஞானம் காரணமென்று புலப்படுகிறது. ஆகையால் இதை வைத்துக்கொண்டு ஜாக்கிரத் பதார்த்தம் ஸத்யமென்று சொல்லலாகாது.

மேலும், நாம் ஜாக்ரத்காலத்தில் எத்தனையோ பொய்யான பொருள்களையும் நித்தியம் காண்கிறோம். அதாவது, பிரகாசமும இருட்டும் கலக்குங்கால் ஒரு கோணலான கயற்றைப்பார்த்து பாம்பென்று நினைத்து பயப்படுகிறான். மற்றவன் இதைப் பார்த்து இது பொய்யென்று சொல்லுகிறான். அவன்சொன்ன பிறகு நாமும் யோஜிக்குங்கால், இது பாம்பல்ல கயறு என்று அறிகிறோம். ஆகையால் ஜாக்கிரத் காலததில்கூட நாம் அஸத்தியமான பதார்த்தங்களைக் காண்கிறோம்.

ஆகையால் இரண்டிடத்திலும் பதார்த்தஞானம் காரணமானபடியால் இரண்டு காலத்திற்கும் பேதமில்லாததால் இரண்டு வஸ்துக்களும் அஸத்தியமே. இவனே இரண்டு காலங்களிலும் பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொள்வதாக நம்ப வேண்டியிருக்கிறது.

இதே அர்த்தத்தை ஜீவனது லக்ஷணம் சொல்லுமிடத்து ஜீவன் இரண்டு காலங்களிலும் பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொள்கிறான என்று பிரகதாரண்யத்தில் கூறியுள்ளார். ஆனால் உங்களுக்கு ஒரு சந்தேகம ஏற்படலாம். அதாவது, இத்தனை பிரபஞ்சத்தையும் ஜீவன் தானே உண்டுபண்ணிக் கொள்வானுனால் ஈசுவரன் அனைவற்றையும் உண்டுபண்ணுகிறான் அதனால் அவனை நாம ஸேவிக்கிறோம். என்ற முன்சொன்ன அபிப்பிராயம் விரோதப்படாதா எனின், உலகினில் காரியம் உண்டாகும் காலத்தில் அதற்குக் காரணமும பிரயோஜனமும் தேவை. அம்மாதிரி இப்பிரபஞ்சத்தை உண்டுபண்ணின ஈசுவரனுக்கு பிரயோஜனம விசாரிக்குங்கால் நாம பிரயோஜனமாகிறோம். நம்

மையுத்தேசித்து உண்டுபண்ணியிருக்கிறார். எப்பொழுது நம்முடைய பிரயோஜனத்திற்காக ஜகத் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதோ அப்பொழுது நாமே இந்த ஜகத்தை உண்டுபண்ணியதாகவே கூறலாம். அது எப்படியெனில் ஒவ்வொரு கிராமங்களிலும் கடைகள் ஏராளமாக இருக்கின்றன. அதை வைத்தவர்கள் சிலர். ஆனாலும் அவ்வூரிலுள்ளவர்கள் சாமான்களை அக்கடைகளில் வாங்காவிடில் மறுநாள் கடையில்லாததால் இவர்கள் எவ்விதம் கடைக்காரர்களாக ஆகிறார்கள். ஆகையால் இரண்டுகாலங்களிலும் கீழ்ச்சொன்ன யுக்திகளாலும் உபநிஷத் பிரமாணத்தினாலும் ஜீவனே மனதினால் பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான். இதேமாதிரி ஸ்வப்பனகாலத்திலும். ஆனால் அந்தகாலத்தில் இவனே மனதால் பதார்த்தங்களை உண்டுபண்ணுவானானால், இவன் நல்ல பதார்த்தங்களையும் தனக்கு சுகமான வஸ்துக்களையும் ஏன் உண்டுபண்ணிக்கொள்ளக் கூடாதென்றால், இதனால் வேறு ஒருவனால் அவைகள் உண்டுபண்ணப்படுகிறது என்றே கூறலாமெனின், அக்காலத்திலும் முன்வாசனைக்குத் தக்கபடியும் பாபபுண்யங்களுக்குத் தக்கபடியும் பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான்.

ஆகையால் இரண்டுகாலத்திலும் ஒரேவிதமாய் இருப்பதால் இரண்டு பதார்த்தங்களும் அஸத்தியமே. த்ருஸ்யம்ருத்யாத்வப்ரகாரணமென்று கூறுவார்கள். இதே விஷயத்தை நமது பகவத்பாதாள் தனது பரமாசார்யரை வணங்குங்கால் சொன்ன தக்ஷிணாமூர்த்யஷ்டகத்தின் முதலான சுலோகமான விச்வம் தர்ப்பணமென்ற சுலோகத்தில் கூறியுள்ளார்.

டி. என். சுப்பிரமணியன்.